**1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

**அ.வ.எண்.449 /2018**

2023 வது ஆண்டு பிப்ரவரி மாதம் 23 ம் நாள் P.W.1 ன் சாட்சிய வாக்கு மூலம் (1969 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின்படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | திரு.ஆனந்தராஜ் | வட்டம் : | தூத்துக்குடி |
| த/பெ : | திரு.சேர்வைக்காரன் | கிராமம் : | |
| வயது : | 50 | மதம் : | |

**23.02.2023 முதல் விசாரணை:** நான் வாதி ஆவேன். எனது தரப்பில் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். அதை படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். 20.07.2012 தேதியிட்டு செட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ.1 ஆகும். 29.03.1958 தேதியிட்ட கிரைய பத்திரம் வா.சா.ஆ.2 ஆகும். சேர்வைக்காரன் இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ.3 ஆகும். சேர்வைக்காரன் பெயருக்கு பிறந்த கூட்டுப்பட்டா வா.சா.ஆ–4 ஆகும். கிரைய ஆவண எண்.931/1975 ன் சார்பதிவக நகல் வா.சாஆ 5 ஆகும். கிரைய ஆவண எண்.395/1985 ன் சார்பதிவக நகல் வா.சா–ஆ.6 ஆகும். கிரைய ஆவண எண்.916/1997 ன் சார்பதிவக நகல் வா.சா.ஆ.7 ஆகும். 1.1.1958 முதல் 9.4.2018 வரை வில்லங்க சான்றிதழ் வா.சா.ஆ–8 ஆகும்.

(பிரிவு 33 இந்திய சாட்சிய சட்டத்திற்கு உட்பட்டு குறுக்கு விசாரணை பிரதிவாதியின் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது)